PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

27.04.2016 - மலர் 13, இதழ் 09



## மின்னல் தாக்கம்

நிகழும் விதங்கள்...



உளத்தெளிவுடன் செயற்படுவோம்...



வேடுவர் காலத்தில் மனிதன் வாழ்ந்த விதம்

விலை ரூபா 15/-



## இலங்கையிலும் கூகுள் ஸ்ட்ரீட் வியூ...

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று சகோதரர்கள் தமது விடுமுறைக் காலத்தில் பலவித பறவைகளை அவதானிப்பதற்காக தத்தமது சைக்கிள்களில் சென்றனர். மீனா நடுவில் செல்ல, அவளுக்குப் பின்னால் அண்ணா சென்றார். முன்னால் செல்பவர் அண்ணாவின் தங்கை ஆவார்.





1. மூவரும் என்ன உறவுடையவர்கள்?
   ................................................................
2. பறவைகளை அவதானிப்பதற்காக அவர்கள் செல்லும் இடம் எது?
   ................................................................
3. மூவரும் செல்லாத பாதை எந்த இடத்திற்குச் செல்வதற்கான பாதையாகும்?
   ................................................................
4. முன்னால் செல்பவர் மீனாவுக்கு என்ன உறவுடையவர் ஆகின்றார்?
   ................................................................



1. படத்தில் மொத்தம் எத்தனை தொப்பிகள் காணப்படுகின்றன?
   ................................................................
2. தலையில் அணிந்திருப்பதைத் தவிர, ஏனையவை விற்பனைக்கு உள்ளவை. விற்பனைக்குள்ளவற்றின் நிறங்களைக் குறிப்பிடுக.
   ................................................................
3. தொப்பி அணியப்படுவதற்கான காரணங்கள் 2 தருக.
   ................................................................
   ................................................................




படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தின் கீழ் கோடிடுக.




1. கோழிகள் கொக்கரிக்கின்றன.
2. பாடசாலை இடைவேளை.
3. கத்தியால் அப்பிள் வெட்டினேன்.



1. ஜெஸி சுவையான கேக் தயாரித்தாள்.
2. எமிலி தனது தாயை அணைத்து முத்தமிட்டாள்.
3. அம்மா குழந்தையுடன் கடைக்குச் சென்றார்.

பின்வரும் இடங்களுக்கு வழங்கப்படும் பெயர்களைக் குறிப்பிட்டு, இவற்றின்மூலம் நாம் பெறக்கூடிய பிரதான சேவை ஒன்றை எழுதுக.





இடம் : ........................................

சேவை : ........................................




இடம் : ........................................

சேவை : ........................................



இடம் : ........................................

சேவை : ........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளத் தெளிவுடன் செயற்படுவோம்



பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை பல்வேறு பருவ நிலைகளை உள்ளடக்கியிருக்கின்றது. பாடசாலை செல்லும் அனைத்து பிள்ளைகளும் பிள்ளைப் பருவத்தினராகவே இனங்காணப்படுகின்றனர். அதன் பின்பு, இளமைப் பருவம் உருவாகின்றது. பிள்ளைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் உடல் ரீதியில் மட்டுமன்றி, உள ரீதியிலும் மாற்றங்கள் ஏற்படும்.



உள்ளம் என்பது, எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கும். உங்கள் உள்ளம் ஒரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு சார்பாக இருக்கும். மறுசந்தர்ப்பத்தில் எதிராக இருக்கும். எவ்வாறாயினும், நல்ல விடயங்கள் பற்றிய அதீத அக்கறையுடன் உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதனையே நீங்கள் செய்ய வேண்டும். இதன் மூலம் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை ஏற்படும். உங்கள் உள்ளம், உங்களுக்கும் மற்றவர்களுக்கும் குறித்த ஒரு தோற்றத்தில் தென்படாவிட்டாலும், நீங்கள் செய்யும் செயல்களும் நடத்தைகளும் உங்கள் உள்ளத்தின் வெளிப்பாடுகளை பிரதிபலிப்பதாகவே இருக்கும் என்பதை கருத்தில் கொள்ளுங்கள்.




## நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள்

பொறாமை, கோபம், அகங்காரம், பேராசை ஆகிய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்வது அவசியம். தீய எண்ணங்கள் உங்களை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்காதீர்கள். கருணை, அன்பு, இரக்கம், பொறுமை ஆகிய நற்குணங்களை வளர்த்துக் கொள்வதனால், உள்ளம் தெளிவு பெறும்; திறமைகள் மெருகேறும்; தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாது; உள்ளம் அமைதியடையும்; நல்லது கெட்டதை பகுத்தறியும் தன்மை ஏற்படும்.

## நேரத்தினை முகாமைத்துவப்படுத்துங்கள்

நேரத்தினை சரிவரப் பயன்படுத்தாதோரின் உள்ளம் சஞ்சலப் பட்டுக் கொண்டே இருக்கும். தேவையற்ற விடயங்களை உள்ளத்தில் நிரப்பிக் கொண்டு கற்பனை உலகில் சஞ்சரித்து, வாழ்வின் முக்கியமான நேரத்தினை வீணடிக்கும் இவ்வாறானவர்கள், பிற்காலத்தில் மனவருத்தத்திற்கு ஆளாவார்கள். எனவே, நேரத்தின் பயனை தவறாது பெற முயலுங்கள்.


விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


## நல்ல விடயங்களைப் பின்பற்றுங்கள்

இன்று நாம் வாழும் சூழல் மிகவும் சிக்கல் மிகுந்தது. நல்ல விடய்ங்களை விட, தீய விடயங்களே சமூகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றன. பலதரப்பட்ட கொள்கைகள், சிந்தனைகள் கொண்டவர்களுடன் நாம் உறவாட நேர்கின்றது.




உள்ளத்தை சஞ்சலப் படுத்தும் விடயங்கள் பலவற்றுக்கு முகம்கொடுக்க நேரிடும். பொதுவாக தொலைக்காட்சி, கணினி, கையடக்கத்தொலைபேசி போன்ற தொடர்பு சாதனங்களுடாக, மனதினை சஞ்சலப் படுத்தும் விடயங்கள் பலவற்றை நாம் பார்க்கவும் கேட்கவும் செய்கின்றோம். இவ்வாறான நிலையில், நாம் உளத் தெளிவுடன், நல்லவற்றை மட்டும் பகுத்தறிந்து, பொறுமை, அன்பு போன்ற குணங்களுடன், மதங்கள் கற்றுத் தரும் நல்லொழுக்கங்களையும் கடைப்பிடித்து வாழ முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நம் வாழ்க்கை சிறந்ததாக அமையும்.

### உளத் தெளிவு பெற...




noolaham.org | aavanaham.org

# புதையலும் குருவும்



ஒரு குருகுலத்தில் குருவும் சீடர்களும் இரவு உறங்கிக்கொண்டிருந்தனர். குரு தூக்கத்தில், "ஆகா! தங்கம்! வைடூரியம்!" என்று உளறிக்கொண்டிருந்தார். இதனைக் கேட்டெழுந்த சீடர்கள், குருவைத் தட்டி எழுப்பினார்கள். தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட குரு "புத்தி கெட்டவர்களே! ஏன் என்னை எழுப்பினீர்கள்? அற்புதமான கனவு ஒன்று கண்டுகொண்டு இருந்தேன். அதைக் கெடுத்து விட்டீர்களே!' என்று சீடர்களைத் திட்டினார்.

உடனே சீடர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு "கனவா? என்ன கனவு கண்டீர்கள் குருவே...?" என்று கேட்டார்கள். குரு, சிறிது நேரம் யோசித்துவிட்டு, "புதையல்! புதையல்!" என்று கத்தினார். "புதையலா? எங்கே? எங்கே?" என்று குதித்தார்கள், சீடர்கள்.

அப்போது குரு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "சீடர்களே, இந்த அறையின் பின்னால் உள்ள தோட்டம் தான் என் கனவில் வந்தது. அத்தோட்டத்தின் வடக்கு மூலையில் ஒரு பானை நிறையப் பொன்னும் வெள்ளியுமாய் கிடக்கிறது!" என்று குரு தாழ்ந்த குரலில் கூறினார். "அடேயப்பா! பானை நிறையத் தங்கமா?" என்று மகிழ்ச்சியால் கீழே விழுந்து புரண்டான் ஒரு சீடன்.

"குருவே! இந்தப் புதையலை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வது?" என்று கேட்டான் ஒரு சீடன். அதற்கு மற்றைய சீடன் "குருவே! இந்த இடம் சரியில்லை. இதை இடித்துவிட்டு ராஜாவுக்குப் போட்டியாக அரண்மனை ஒன்றைக் கட்ட வேண்டும் என்றான். "இனிமேல் நமக்குக் கவலையே இருக்காது. தினமும் வடையும் பாயாசமுமாகச் சாப்பிடலாம்!" என்று குதித்தார்கள் வேறு சில சீடர்கள்.

"குருவே! அப்படியானால் நாம் எல்லோரும் இப்போதே ஓடிப்போய் அந்த இடத்தைத் தோண்டிப் பார்ப்போம்" என்றான் சீடர்களில் ஒருவன்.

"ஆமாம்! அதுதான் நல்ல யோசனை. பகலில் தோண்டினால் ஊர் பூராகவும் தெரிந்துவிடும். அப்புறம் எல்லோரும் பங்கு கேட்பார்கள்" என்றார் குரு. குருவும் தாம் கனவில் கண்ட இடத்திற்குச் சென்றார். வெளிச்சம் தெரிவதற்காகக் கையில் தீப் பந்தத்தை பிடித்துக்கொண்டு நின்றார்கள் சீடர்கள். யாராவது பார்க்கிறார்களா? என்று பார்த்துவிட்டு, குரு தம்முடைய கைத்தடியால் ஓர் இடத்தில் குறியீடு ஒன்றைப் போட்டார். உடனே ஏனைய சீடர்கள் வேகமாக அந்த இடத்தைக் கையால் தோண்ட ஆரம்பித்தார்கள். "குருவே! இன்று புதையலை விடக்கூடாது" என்றபடி சீடர்கள் தொடர்ந்து பள்ளம் பறித்தார்கள். அவர்கள் மாறி மாறி தோண்டிக்கொண்டே இருந்தபோது, திடீரென்று வெள்ளையாக ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. "ஆ! புதையல்! புதையல்!" என்று குதித்தபடி இன்னும் வேகமாகத் தோண்டினார்கள் சீடர்கள். உடனே, குரு குழிக்குள் கையை விட்டுப் பார்த்தார். உருண்டையாக ஏதோ ஒன்று கிடந்தது. எல்லோரும் ஆசையோடு அதைப் பார்த்தார்கள். குருவின் கையில் இருந்தது புதையல் அல்ல ஒரு மண்டை ஓடு! அவ்வளவுதான்! ஐயோ! என்று அலறியபடி ஆளுக்கொரு பக்கமாக விழுந்தடித்து ஓடினார்கள் குருவும் சீடர்களும்.

# சுவையான மாம்பழங்கள்



ஓர் ஊரில் தினேஷ், சந்துரு என்ற நண்பர்கள் இருந்தார்கள். ஒருநாள் "நம் வீட்டுக்கு சந்துரு என்ற நண்பர் ஒருவர் வருவார். இந்த மாம்பழத்தை அவருக்காகத்தான் வாங்கி வந்தேன். காலையில் இதனை வெட்டி தட்டில் தயாராக வைத்திரு" என்று வேலைக்காரனிடம் கூறினான் தினேஷ். ஞாயிறன்று வேலைக்காரன் மாம்பழத்தை வெட்டும் போது பழத்தின் மணம் அவன் மூக்கைத் துளைத்தது. வேலைக்காரனால் தன் நாவை அடக்க முடியாமல் போய்விட்டது. இதனால், அனைத்து மாம்பழங்களையும் சீற்று கீற்றாக வெட்டி அவன் சாப்பிட்டு முடித்துவிட்டான். தன் நப்பாசையால் செய்த தவறை எண்ணிக்கொண்டிருக்கும் போது ஒரு மனிதர் அங்கு வந்துகொண்டிருந்தார். அவர்தான் முதலாளி அழைத்த நண்பர் சந்துருவாக இருக்குமோ? என எண்ணினான். அவன் மூளை துரிதமாக வேலை செய்தது. உடனே அருகில் நின்ற தினேஷைப் பார்த்து "ஐயா இந்த துருப்பிடித்த கத்தியால் மாம்பழத்தை வெட்ட முடியவில்லை" என்றான் வேலைக்காரன்.

"கத்தியை, நான் தீட்டித் தருகிறேன்" என்று கூறி அதை வாங்கிக்கொண்டு தோட்டத்துக்குச் சென்றான் தினேஷ். அங்கிருந்த கல்லில் அதை தீட்டினான். அப்போது வேலைக்காரன் வீட்டுக்குள் மெதுவாகச் சென்றான். அப்போது சந்துருவும் நண்பன் வீட்டின் முன் வந்து நின்றான். அவன் வந்ததும், ஐயா...! நீங்கள் இப்போது வீட்டுக்குள் நுழைய வேண்டாம். என் முதலாளிக்கு பைத்தியம் பிடித்துள்ளது. உங்கள் இரு காதுகளையும் அறுக்க அவர் திட்டமிட்டுள்ளார்" என்று சந்துரு காதில் மட்டும் படும்படியாக மெதுவாகக் கூறினான் வேலைக்காரன்.

இதைக் கேட்ட சந்துரு பயத்துடன் "ஏன்? எனது காதை அறுக்கத் திட்டமிட்டுள்ளார்" என்று கேட்டான். "சில நாட்களாகவே இவர் இப்படித்தான் யாரையாவது விருந்துக்கு அழைத்து காதை அறுப்பேன் என அவர்களை துரத்துவதும் வேடிக்கையாகிவிட்டது. என்மீது நம்பிக்கையில்லை என்றால் அதோ, பாருங்கள், அவர் கத்தியை தீட்டிக்கொண்டு இருக்கிறார்" என்றான் வேலைக்காரன். அவன் காட்டிய திசையைப் பார்த்தான் சந்துரு. அங்கே தினேஷ் ஒரு கத்தியை கல்லில் தீட்டிக்கொண்டிருந்தான்.

"என்ன கொடுமை இது விருந்திற்கு அழைத்துவிட்டு தரும் பரிசு இதுதானா? என்று எண்ணி சந்துரு இங்கிருந்து தப்பித்தால் போதும் என்ற எண்ணத்துடன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான். உடனே வேலைக்காரன் தினேஷிடம் சென்று "ஐயா, நீங்கள் அழைத்த மனிதர் இரண்டு மாம்பழங்களையும் எடுத்துக்கொண்டு வேகமாக ஓடுகிறார்!" என்றான். "என்ன அந்த பேராசைக்கார சந்துரு இரண்டு பழங்களையும் எடுத்துக்கொண்டானா?" என்று கத்தினான். அதற்கு வேலைக்காரன் எதுவும் தெரியாதவன்போல் "ஆம் ஐயா, இரண்டையும் எடுத்துக்கொண்டார்" என்றான்.

உடனே, தினேஷ் கையில் கத்தியுடன் எழுந்து சந்துரு பின்னால் ஓடினான். "சந்துரு ஒன்றை மட்டும் கொடு," என்று கத்தினான். "இவனிடம் அகப்பட்டால் என் இரண்டு காதையும் அறுத்துவிடுவான்" என்று எண்ணிய சந்துரு உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் வேகமாக அங்கிருந்து ஓடி மறைந்தான். வேலைக்காரனும் தனது திட்டம் பலித்ததை எண்ணி மகிழ்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடுவர் கால

இற்றைக்கு நான்கு மில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஒஸ்ட்ரோலோபித்திகஸ் மானிடனே, முதன்முதலாக மனித இலட்சணங்களை வெளிப்படுத்தினான்.




01




குரங்காக வாழ்கை நடத்திய இவர்கள், மரங்களில் இருந்து இறங்கி இரு கால்களால் பயணிக்கத் தொடங்கிய தினமே வேடுவர் யுகத்தின் ஆரம்பம் என கருதப்படுகின்றது.

02




வேடுவர் காலத்தில் மனிதனின் உருவமானது, நெற்றிப்பகுதி மிகவும் குறுகியதாகவும் பின்நோக்கியும் வளைந்திருந்தது. மூளையானது, நவீன மனிதனின் மூளையை விட சிறியதாக இருந்தது. நடக்கும்பொழுது முன்நோக்கி ஓரளவு சரிந்தே அந்த மனிதன் பயணித்தான். அவனின் விரல்களின் தோற்றமும் மாறுபட்டு இருந்ததோடு, கைகளைப் பயன்படுத்தி குழிகளைத் தோண்டுதல், கனமான தடிகளைப் பிடித்தல், தாக்குதல் நடத்துதல் போன்ற வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டான்.

03



கோபம், பயம், மகிழ்ச்சி போன்றவற்றை வெளிப்படுத்துவதற்காக எழுப்பிய பல்வேறு சத்தங்கள் மூலமாகவே பேச்சுத் திறன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

04




இறைச்சி, முட்டை, பழங்கள், கிழங்குவகைகள், கீரை உள்ளிட்ட இலை வகைகள் என்பனவே அவர்களின் உணவாக இருந்தது.

05



நெருப்பைக் கண்டுபிடித்தமை இந்த யுகத்தின் மிக முக்கிய கண்டுபிடிப்பாகும்.

06



விலங்குகளை வேட்டையாடவும் பயங்கரமான மிருகங்களிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் உணவுகளை சுட்டு உண்பதற்கும் நெருப்பு அதிகளவில் பயன்படுத்தப்பட்டது.

07




வேடுவர் காலத்தில் பிரதான உபகரணமாக கற்களே இருந்தன. மிருகங்களை வேட்டையாடுவதற்கும் மிருகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் மனிதன் கல் ஆயுதங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தான். மரத்தால் முறித்தெடுத்த தடிகளின் முனையை கூர்மைப்படுத்தி அவற்றைக் கொண்டு நிலத்தை தோண்டவும் மிருகங்களை வேட்டையாடவும் முடியும் என்பதை அறிந்துகொண்ட மனிதன் விளிம்புள்ள கூர்த்தடிகளை தயாரித்துக்கொண்டான். அத்தோடு, முள் குத்தி, சிறு கோடரி, ஈட்டி, ஒருவகை மண் வெட்டி போன்றவற்றையும் தயாரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்தில் மனிதன் வாழ்ந்த விதம்

08



வேட்டையாடுவதற்கு குழுவாக இணைந்து இரையை சுற்றிவளைத்து தாக்கி மிருகங்களை கொன்றனர். ஆண்கள் வேட்டையாட, பெண்கள் தாவர உணவுகளை சேகரித்தல், நீர் கொண்டு வருதல், உணவு தயாரித்தல், பிள்ளைகளை பராமரித்தல் போன்றவற்றைச் செய்தனர். நிரந்தர குடும்ப எண்ணக்கரு இருக்கவில்லை. இக்குழுவை மானிடக் கூட்டம் (Human Herd) என அழைத்தனர்.

09




கொடிகளின் மூலமும் வேறு முறைகளையும் பயன்படுத்தி மிருகங்களுக்கு பொறி வைக்கும் முறைகளைக் கையாண்டான்.

10



வேடுவர் காலத்தின் ஆரம்பத்தில் அவர்கள் உடைகளை பயன்படுத்தவில்லை. ஆனால், உடலில் வெவ்வேறு வர்ணங்களைப் பூசிக் கொண்டனர். அத்தோடு, உடல் முழுவதும் உருவங்களை வரைந்து கொண்டனர்.


11



உடை அணிவது குறித்து முதன்முதலாக முயற்சித்தது ஹோமோ சேப்பியன் நியண்டதால் லென்ஸ் மனிதனே. அவன் மிருகங்களின் தோல், மரங்களின் இலை, குழைகள், மரப்பட்டைகள் என்பனவற்றை உடையாகப் பயன்படுத்தினான்.


மிருகங்களின் எலும்புகள், மிருகங்களின் பற்கள், சிப்பிகள் என்பனவற்றை ஆபரணங்களாக அணிந்துகொண்டான்.

12



உணவை சேகரிப்பதற்காக இடத்துக்கிடம் செல்லும்பொழுது மழைக்கும் இரவு நேரத்திற்கும் ஒதுங்குவதற்காக கற்குகைகளையும், அடர்ந்த மரக்கிளைகளின் கீழ்பகுதிகளையும் பாரிய மரங்களின் பொந்துகளையும், பள்ளம், குழி போன்றவற்றையும் தமது வாழ்விடமாக பயன்படுத்தினர்.

13



அவர்களுக்கென ஒருங்கமைக்கப்பட்ட சமய எண்ணக் கருக்கள் எதுவும் இல்லை. மழை பொழிதல், இடிமின்னல், பூமியதிர்ச்சி, சூரியோதயம், சூரியன் மறைவு போன்ற இயற்கை நிகழ்வுகளை வணங்கினர்.

14




ஆரம்ப காலகட்டத்தில் அவர்கள் இறந்தவர்களின் உடல்களை மிருகங்களுக்கு உணவாக எறிந்தனர்.

15



எனினும், இற்றைக்கு 30,000 வருடங்களுக்கு முற்பட்ட காலம் முதல் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய ஆரம்பித்தனர்.

16



கருத்துப் பரிமாற்றங்களுக்காக பல்வேறு சத்தங்களையும் சமிக்ஞைகளையும் பயன்படுத்தினர். எலும்புகள், உலோகம், தோல், கற்கள் ஆகியவற்றில் பல்வேறு சமிக்ஞைகளை, குறியீடுகளை குறித்தனர். அவை பின்னர் ஓவியக் கலையாகவும், எழுத்து வடிவங்களாகவும் பரிணாமம் பெற உதவின.

- இரஞ்சித் ஜெயகர்

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)




பெயர்: ..............................................

01) **பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை தருக.**

அண்ணனும் தங்கையும் கடற்கரைக்குப் போக விரும்பினார்கள். பெற்றோர் அவர்களை அழைத்துச் சென்றனர். சூரியன் மேற்கில் தங்கத் தட்டுப் போன்று காட்சி தந்தது. மீனவர்கள் கட்டுமரங்களிலும் தோணிகளிலும் கடலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். ஒரு சிலர் மட்டும் கரையை அடைந்தனர். பெரிய அலைகள் புரண்டு புரண்டு கரையில் மோதிச் சிதறின. அண்ணனும் தங்கையும் அலைகளுடன் ஓடி விளையாடினர். சிறுவர்கள் மணல் வீடு கட்டி விளையாடினர். வேறு சிலர் ஓடி விளையாடினர். அண்ணனும் தங்கையும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

1. இச்சம்பவம் எப்பொழுதைக் குறிக்கிறது?
   ..............................................
2. அண்ணனும் தங்கையும் எங்கு செல்ல விரும்பினர்?
   ..............................................
3. சிறுவர்கள் கடற்கரையில் என்ன செய்தனர்?
   ..............................................
4. புரண்டு புரண்டு ஓடியது எது?
   ..............................................
5. பந்தியிலுள்ள உவமைச் சொல் ஒன்று தருக.
   ..............................................
6. கடல் என்ற சொல்லுக்கு ஒத்தசொல் இரண்டு தருக.
   ..............................................

02) **சேர்த்தெழுதுக.**

1. மலை + சாரல் = ..............................................
2. முள் + செடி = ..............................................

03) **சரியான விடையின்கீழ் கீறிடுக.**

1. தலையணை, தலைகனி, தலையணி
2. புடவை, புடைவை, பிடவை

04) **தமிழில் கருத்தை எழுதுக.**

1. Please come to school - ..............................................
2. Please give my book - ..............................................

05) **பின்வரும் சிங்கள சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. அல கிலோவக் கீயத? - ..............................................
2. மம கடேட்ட யனவா - ..............................................

06) **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

1. ஆற்றங்கரையோரங்களில் ஏற்படும் மண்ணரிப்பிற்குக் காரணம்;
   1. ஓடும் நீர் 2. காற்று 3. மழைவீழ்ச்சி
2. காலையில் மலரும் பூக்கள் கவர்ச்சியான நிறத்தைக் கொண்டிருப்பதற்கான காரணம்;
   1. சூழலை அழகுபடுத்த
   2. வண்டுகளை கவர்ந்திழுப்பதற்கு
   3. சூழலை அசுத்தப்படுத்த
3. பின்வருவனவற்றுள் அடைகாக்காத பிராணி;
   1. காகம் 2. கோழி 3. ஆமை
4. நாம் எமது கடமைகள், பொறுப்புகளை உதாசீனம் செய்தால்;
   1. வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்
   2. எமது குடும்பத்தினரது நிம்மதியும் மகிழ்ச்சியும் பறிபோகும்
   3. பிறர் நம்மை மதிப்பர்
5. விவசாயம் செய்வதற்கு உகந்த மண் எது?
   1. களிமண் 2. இருவாட்டி மண்
   3. மணல் மண்
6. ஒருவர் உடற்பயிற்சி செய்வதற்கு முன் செய்ய வேண்டியது;
   1. உடலைத் தளர்த்துதல்
   2. குளிர்பானம் அருந்துதல்
   3. நன்றாக உணவு உண்ணுதல்
7. மூடாமல் சமைக்க வேண்டிய உணவுப் பொருள் யாது?
   1. உருளைக்கிழங்கு 2. பலாக்காய்
   3. மரவள்ளிக்கிழங்கு
8. ஏறுகொடித் தாவரங்களில் ஒன்று;
   1. வல்லாரை 2. பூசணி 3. வெற்றிலை
9. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது;
   1. குளவி 2. இராமபாணம்
   3. அழுக்கணவன்
10. நீர் வெறுப்பு நோயை ஏற்படுத்தும் பிராணி எது?
    1. நுளம்பு 2. நாய் 3. பூனை

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(ஏப்ரல் 20 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 05. 3 | 09. 3 | 13. 2 |
| 02. 2 | 06. 1 | 10. 1 | 14. 3 |
| 03. 2 | 07. 2 | 11. 1 | 15. 2 |
| 04. 1 | 08. 3 | 12. 1 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம்-II
பாடம் - 101

# வானொலி அறிவிப்பு செய்த மார்கோனி...


மார்கோனி


ஈஃபிள் கோபுரத்தில் வானொலி நிலையம்

வானொலியைக் கண்டுபிடித்தவர் மார்கோனி என்பது எல்லோருக்கும் தெரியும். இத்தாலியைச் சேர்ந்த மார்கோனி 24 வருட முயற்சியின் பின்னரே 1897 ஆம் ஆண்டில் வானொலியை கண்டுபிடித்தார்.

இதிலுள்ள இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் உலகின் முதலாவது வானொலி நிலையம் மார்கோனியின் பெயரில் தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதாகும். 1895 ஆம் ஆண்டிலேயே இது நிகழ்ந்தது. அதாவது, வானொலி அறிமுகம் ஆவதற்கு முன்னரே வானொலி நிலையம் அறிமுகமாகிவிட்டதென்றால் பொருந்தும். இந்த வானொலி நிலையத்தின் ஒலி வாங்கியின் முன் அமர்ந்த மார்கோனி செக்கிங் (Checking) என கூறிக்கொண்டிருந்தாராம். அந்த வகையில் பார்க்கையில் இதுதான் உலகின் முதலாவது வானொலி அறிவிப்பாக கருதப்படக் கூடியது.


இதன் பின்னர் பல நாடுகளில் பல இடங்களில் பரீட்சார்த்த ஒலிபரப்புக்கள் நடைபெற்று வந்தபோதிலும், உத்தியோகபூர்வமாக ஒலிபரப்பை நடத்திய வானொலி நிலையத்தின் பெயர் XWA என்பதாகும். இந்நிலையம் 1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கெனடாவில் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு, 1921 ஆம் ஆண்டில் பிரான்ஸிலுள்ள ஈஃபிள் கோபுரத்தின் மூன்றாம் தளத்தில் இருந்து "ரேடியோ டவர் ஈஃபிள்" எனும் பெயரில் வானொலி ஒலிபரப்பொன்று நடைபெற்றது. இதுதான் பிரான்ஸின் முதலாவது வானொலி ஒலிபரப்பாக கருதப்படுகின்றது. தினசரி 30 நிமிடங்கள் மாத்திரமே இந்த ஒலிபரப்பு நடந்தது. முக்கிய அறிவித்தல்கள், அரச செய்திகள் ஆகியன இந்த அரைமணி நேரத்தில் ஒலிபரப்பாகியது.

இதேவேளை, உலகில் ஒட்டு மொத்தம் எத்தனை வானொலி நிலையங்கள் உள்ளன என்று தெரியுமா? பண்பலை, சிற்றலை வரிசைகள் உள்ளடங்கியதாக மொத்தம் 44,000 வானொலி நிலையங்கள் இருப்பதாக அமெரிக்காவின் Central Intelligence Agency நிறுவனத்தின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது. ஆனால், இந்த எண்ணிக்கையில் சில ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், உலகளவில் அன்றாடம் புதுப்புது வானொலி ஒலிபரப்புக்கள் அறிமுகமாகிக்கொண்டே வருகின்றன. எனவே, உலகிலுள்ள வானொலி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை என்பது அறுதியிட்டுக் கூறமுடியாத ஒன்றாகவே உள்ளது.

இன்னும் சில நாடுகளில் ஆட்சியாளர்களின் அனுமதியைப் பெறாத ரகசிய ஒலிபரப்புக்கள் ஒலிபரப்பாவதுமுண்டு. இவை தடைசெய்யப்பட்ட வானொலி ஒலிபரப்புக்களாக இருப்பதால் இவற்றை அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ வானொலி நிலையங்களின் பட்டியலில் உலக நாடுகள் சேர்ப்பதில்லை. ஆனால், இவற்றிற்கென்று குறிப்பிட்ட சில வானொலி அபிமானிகள் இருக்கவே செய்கின்றனர்.

(தொடரும்)

-ரிஷபன்


ஈஃபிள் கோபுர வானொலி நிலைய உட்புறம்


SWA வானொலி நிலையம்

# மீனை இரையாக்கும் சிலந்திகள்



அவுஸ்திரேலியா நீர்நிலைகளில் புதுமையான சிலந்திகளை அந்நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த சிலந்திகளால் நீரில் நீந்த முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. இவை தமது இரையைப் பிடிப்பதற்கு நீர்நிலைகளில் அதிர்வலைகளை உருவாக்குவதன்மூலம் இரையை அடையாளம் கண்டுகொள்கின்றன. இவை தமது வேட்டையில் இடையூறுகள் ஏதும் ஏற்படாவண்ணம் மிருக்க இரையை பிடித்தவுடனேயே நீர்நிலைகளின் அடியில் வேகமாக நீந்திச் செல்கின்றன.

இத்தகைய கையாளுகை மூலம் மீன், தவளை, பல்லிகள், தேரை என்பவற்றுடன் சிறு பாம்புகளையும் தன் உணவாக உட்கொள்கின்றன. இவை Pisauridae என்ற சிலந்தி குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். இச்சிலந்திகளில் ஆணின் தலைப்பகுதியில் வெள்ளை நிறக் கோடுகளும், பெண்ணின் தலையின் இரு புறமும் இளமஞ்சள் நிறக் கோடுகளும் உள்ளன. இதன் மூலம் இச்சிலந்தி இனங்களை இனம் கண்டு கொள்ள முடிகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்டி இராசதானியுடன் தொடர்புடைய

# முல்கிரிகல ஓவியங்கள்








தென் மாகாணத்தில் காணப்படும் வரலாற்றுப் பெருமை மிக்க பௌத்த வழிபாட்டுத் தலங்களில் முல்கிரிகல ரஜமகா விகாரை சிறப்பான ஓர் இடத்தைப் பெறுகிறது. இந்த விகாரை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை நகரிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

முல்கிரிகல விகாரையின் ஓவியங்கள் கண்டியரசிற்குரிய ருகுணு கலை அம்சங்களைத் தழுவிய நிர்மாணங்களாகும். இங்குள்ள ஓவியங்களில் 'மேளவாத்தியம் வாசிக்கும் பெண்கள்' சிறப்பான அவதானத்தைப் பெற்ற ஓவியம் என்பது குறிப்பிடத்தக்கது. ருகுணு பிரதேசத்திற்கு உரித்தான மகர தோரணம், காவர் சிலைகள் என்பன இங்கு காணப்படுகின்றன.

-அ







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் கவனத்தை ஈர்த்த நைஜீரிய குழந்தை



போஷாக்குக் குறைபாட்டுடனும் உடல் முழுவதும் அழுக்கடைந்து - கவனிப்பாரற்ற நிலையிலும் இருந்த நைஜீரிய குழந்தை மற்றும் அக்குழந்தையை அரவணைத்து, அதனை ஆரோக்கிய நிலைக்குக் கொண்டு வந்த டென்மார்க் நாட்டு சமூக சேவையாளர் பற்றிய செய்திகளும் படங்களும் அண்மையில் இணையத்தளங்களூடாக உலகெங்கும் பரவி, உலகத்தாரின் கவனத்தை ஈர்த்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.



வீதியில் ஆதரவற்றுத் திரிந்த குழந்தைக்கு அன்ஜா லோவன் நீர் அருந்தக் கொடுக்கும் காட்சியும், ஆரோக்கியமாக இருக்கும் குழந்தை ஹோப்பின் இன்றைய நிலையும்

இரண்டு வயதுடைய இந்த குழந்தைக்கு, பிறப்பிலேயே இருந்த உடலுறுப்புக் குறைபாடு காரணமாக குழந்தையின் பெற்றோர் அதனை கைவிட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் எட்டு மாதங்களாக இந்தக் குழந்தை குப்பைகளை உட்கொண்டே உயிர்வாழ்ந்துள்ளது. டென்மார்க் நாட்டு சமூக சேவகரான அன்ஜா ரிங்கரின் லோவன் என்ற பெண் மணி, நைஜீரியாவில் சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற போதுதான், வீதியில் உணவு தேடிக் கொண்டிருந்த இந்த குழந்தையைக் கண்டுள்ளார். அன்ஜா லோவன், அக் குழந்தையின் அருகில் சென்று அதற்கு தண்ணீர் அருந்தக் கொடுக்கும் காட்சியினை, அவருடன் இருந்த புகைப்படவியலாளர் படம் பிடித்துள்ளார். இப்புகைப்படம் கடந்த ஜனவரி 31ஆம் திகதி இணையத்தளமூடாக உலகம் முழுவதும் பரவியதுடன், இதனைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். போஷாக்குக் குறைபாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த இந்த குழந்தைக்கு




அன்ஜா லோவனின் குழந்தையுடன் விளையாடும் ஹோப்


'ஹோப்' (நம்பிக்கை) என்று அன்ஜா பெயர் சூட்டினார். குழந்தையை குளிப்பாட்டி, மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, குழந்தை புழுத்தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். இந்த குழந்தை பற்றிய தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவியதன் காரணமாக, குழந்தைக்கு உதவ பலரும் முன் வந்தனர். இதனையடுத்து, குழந்தைக்காக அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டது. இதன் மூலம் சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி சேர்ந்துள்ளதாக அன்ஜா லோவன் குறிப்பிட்டுள்ளார்.


உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை என்பது, மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு விடயமாகும். சிறந்த காலநிலை மனித வாழ்க்கைக்கு சிறப்பானதாக அமையும். சீரற்ற காலநிலை மனித வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையும்.


வடகீழ் பருவக்காற்று மழைவீழ்ச்சிப் பரம்பல்


தென்மேல் பருவக்காற்று மழைவீழ்ச்சிப் பரம்பல்


முதலாவது இடைக்கால பருவக்காற்று மழைவீழ்ச்சிப் பரம்பல்


இலங்கையின் வருடாந்த மழைவீழ்ச்சி



# ‘கால









## ‘காலநிலை’ என்றால் என்ன?

ஒரு பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலவும் வெப்ப நிலை, மழைவீழ்ச்சி, காற்ற முத்தம், காற்றின் இயல்பு, முகில் ஆகியவற்றின் அளவீடுகளைக் கணிப்பதே, ‘காலநிலை’ என்பதன் இலகுவான வரைவிலக்கணமாகும். முப்பது வருடங்களுக்கொரு முறையே இவ்வாறான கணிப்பீடுகள் நடைபெறும். அவ்வாறு கணிக்கப்பட்டுப் பெறப்படும் தரவுகளின் படியே, அந்தந்தப் பிரதேசங்களின் காலநிலை குறித்து தீர்மானிக்கப்படுகின்றது.

## காலநிலையின் முக்கியத்துவம்

காலநிலையானது, மனிதனின் இருப்புக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். சீரற்ற காலநிலை நிலவும் பிரதேசங்களில் மனிதன் வாழமாட்டான். புவி தவிர்ந்த ஏனைய கிரகங்களில் மனிதனால் வாழமுடியாமைக்குக் காரணம், அங்கு வாழ்வதற்கேற்ற காலநிலை இல்லாமையே ஆகும். பூமியில் சனத்தொகைப் பரம்பல்கூட அந்தந்தப் பகுதிகளில் நிலவும் காலநிலை அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அந்த வகையில், இடைவெப்ப வலயத்திலும் கணிசமான அளவு மழைவீழ்ச்சி உள்ள பிரதேசங்களிலும் அதிக சனத்தொகையைக் காணலாம். எனினும், சீரற்ற- இதமற்ற காலநிலை நிலவும் பிரதேசங்களில் சனத்தொகை மிகவும் குறைவாகவே இருக்கும்.

## மழைவீழ்ச்சி

இலங்கையின் வருடாந்த மழைவீழ்ச்சியில் பருவப் பெயர்ச்சிக் காற்று, வெப்பச் சலனம், சூறாவளி என்பன பெரும் தாக்கம் செலுத்துகின்றன. வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு உலர் பிரதேசங்களில் வருடாந்த மழைவீழ்ச்சியானது, 900 மி.மீற்றரிலும் குறைவானதாகும். மத்திய மலைநாட்டின் அதி ஈரளிப்பான பிரதேசங்களில் 5000 மி.மீற்றரிலும் அதிக வருடாந்த மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.

## காலநிலை மாற்றங்களைக் கண்டறிவது யார்?


காலநிலை மாற்றங்கள் பற்றிய ஆய்வு நிலையமே, இலங்கையில் இப்பணியை மேற்கொள்கின்றது. காலநிலை மாற்றம் குறித்த பிரச்சினைகளை வெளியிடுவதற்காக 1999 ஜூன் 11 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தினூடாக, வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒரு பகுதியாக, காலநிலை மாற்றங்கள் பற்றிய ஆய்வு நிலையம் நிறுவப்பட்டது. அந்த நிலையத்தினால் கண்டறிந்து உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே, அனைத்து காலநிலை தகவல்களையும் நாம் அறிந்துகொள்கின்றோம்.

## காலநிலையும் பொருளாதாரமும்

பல்வேறு வலயங்களில் நிலவும் காலநிலையின் அடிப்படையிலேயே, அந்தந்த வலயங்களின் பொருளாதாரமும் அமையும். மழைவீழ்ச்சி அதிகம் கிடைக்கும் பகுதிகளில் விவசாயம் முக்கிய வாழ்வாதாரமாக இருக்கும். கடும் வெப்பம் நிலவும் பாலைவனப் பகுதிகளில் உள்ளவர்கள் கால்நடை வளர்ப்பிலும் இடம்விட்டு இடம் செல்லும் இடையர்களாகவும் காலத்தைக் கழிக்கின்றனர். மிதவெப்ப வலயத்தில் நிலவும் காலநிலைக்கமைய, அத்தகைய பகுதிகளில் கோதுமை, பார்லி, ஓட்ஸ், திராட்சை, அப்பிள், பெயார்ஸ் போன்ற தானியங்களும் பழவகைகளும் விளைவிக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, இத்தகைய பிரதேசங்களில் வர்த்தக நோக்குடன் பாற்பண்ணைத் தொழிலும் பாரிய அளவிலான கால்நடை வளர்ப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் வருடாந்த வெப்பநிலைப் பரம்பல்



# லநிலை’ பற்றி அறிவோம்



மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், கைத்தொழில்மயம் மற்றும் திறந்த பொருளாதாரம் போன்ற சாதக நிலமைகளால் இன்றளவில் பல்வேறு வலயங்களிலும் பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## வெப்பநிலை

இலங்கையின் அமைவிடத்திற்கேற்ப, நாட்டின் காலநிலையானது, மத்தியகோட்டுத் தன்மைகளைக் கொண்டுள்ளது. தாழ்நிலங்களில் 26°C - 27°C இற்கு இடைப்பட்ட வருடாந்த வெப்பநிலை நிலவும்.

வடகிழக்கு கரையோரங்களில், உதாரணமாக; திருகோணமலையில் அதிக வெப்ப வீச்சு காணப்படுகின்றது. அது 29.0°C இலிருந்து 37.0°C வரை அதிகரித்துச் செல்லும். மத்திய மலைநாட்டில் தரையின் உயரம் அதிகரித்துச் செல்லும் அளவிற்கு வெப்பநிலை குறைவடைந்து செல்லும்.

மத்திய மலைநாட்டின் அதி உயர் பிரதேசத்தில் வெப்பநிலை பொதுவாக 15.90°C அளவு இருக்கும். எனினும், கடுங்குளிர் காலத்தில் அது 6.0°C வரை குறைவடையும்.

## காலநிலை மாற்றங்களின் கால எல்லைகள்

ஒரு வருடத்தின் 12 மாதங்களில், இலங்கையினுள் தாக்கம் செலுத்தும் காலநிலை மாற்றங்களை நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளனர்.

★ முதலாவது இடைக்கால பருவக்காற்றுக் காலம்: மார்ச்- ஏப்ரல் வரை.

★ தென்மேல் பருவக்காற்றுக் காலம்: மே- செப்டெம்பர்.

★ இரண்டாம் பருவக்காற்றுக் காலம்: ஒக்டோபர் - நொவெம்பர் வரை.

★ வடகீழ் பருவக்காற்றுக் காலம்: டிசம்பர் - பெப்ரவரி.


## இலங்கையின் காலநிலை

பூமியில் இலங்கையின் அமைவிடத்தின்படி, வெப்ப மண்டலத்திற்குரிய காலநிலை லட்சணங்களை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. - ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்கம்



*இது சித்திரைப் புத்தாண்டுக் காலமாகும். சித்திரையுடன் மழைக்காலமும், அதனுடன் இணைந்ததாக மின்னல் தாக்கங்களும் ஆரம்பமாவது வழமையான நிகழ்வுகளாகும். இலங்கையைப் பொறுத்தவரை, மார்ச் - ஏப்ரல் மற்றும் ஒக்டோபர்- நொவெம்பர் காலப்பகுதிகளில் பருவமழை வீழ்ச்சியுடன் மின்னல் தாக்கமும் ஏற்படுவதுண்டு. மின்னல் தாக்கம் என்பது, சிறிய மற்றும் பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய ஓர் இயற்கை அனர்த்தமாகும்.*

## 'மின்னல்' என்றால் என்ன?

மின்னேற்றம் கொண்ட முகில்களில் இருந்து வெளிப்படும் மின் ஆற்றலானது, தரையை அல்லது ஏனைய முகில்களை நோக்கிப் பாய்வதையே 'மின்னல்' என்கின்றோம். பொதுவாக, நமது வளிமண்டலத்தினை ஊடுருவி மின் அலைகள் பயணிப்பதில்லை. எனினும், முகில்களில் ஏற்படும் அதிக மின்னேற்றம் காரணமாக, அதனை சூழ பாரிய மின் புலம் உருவாகின்றது. இந்த மின் புலம் மீற்றருக்கு 3 மில்லியனாக விரிவடையும்போது, வளியினூடாக நிலத்தினை நோக்கி மின் தாக்கம் நிகழ வாய்ப்புண்டு. இவ்வாறு தான் மின்னல் தாக்கம் நிகழ்கின்றது.

## மின்னல் வகைகள்

மின்னல்கள் பிரதானமாக மூன்று வகைப்படும்.

★ **புவி மின்னல்:** முகிலில் இருந்து புவியை நோக்கி நேரடியாக வரும் மின்னல் இந்த வகையில் அடங்கும். இவை மிகவும் ஆபத்தானவை.



★ **வளி மின்னல் (வாயு மின்னல்):** முகில்களிலிருந்து வளிமண்டலத்தை நோக்கி மின்னேற்றம் பாய்வதனால், இவ்வகை மின்னல் உருவாகின்றது. இவை புவி மின்னல் போன்று ஆபத்தானவை அல்ல.

★ **முகில் மின்னல்:** மின்னேற்றம் கொண்ட முகில்களுக்கும் மின்னேற்றமற்ற முகில்களுக்கும் இடையேயான மோதலின்போது, இவ்வகை மின்னல் உருவாகின்றது. முகில் மின்னலானது, புவி மின்னல் போன்று ஆபத்தானதன்று. எனினும், மின் உபகரணங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

## மின்னல் தாக்கம் நிகழக்கூடிய விதங்கள்

**நேரடி மின்னல்:** மனிதர்கள் அல்லது பொருட்களின் மீது நேரடியாக ஏற்படும் மின்னல் தாக்கம் இவ்வாறு அழைக்கப்படும். திறந்தவெளியில் அல்லது உயரமான இடத்திலுள்ள மனிதர்கள் அல்லது பொருட்கள் இந்த மின்னல் தாக்கத்திற்குள்ளாகும். இதனால் உயிரிழப்புகள் ஏற்படக்கூடும்.

**பக்கப்பாய்ச்சல்:** உயரமான மரங்கள், கட்டடங்கள் அல்லது வேறேதுமொரு பொருளின் மீது மின்னல் தாக்கும் போது, அதன் அருகில் உள்ள நபரை அல்லது உயிரினத்தை அல்லது வேறேதுமொரு பொருளை அந்த மின்னல் தாக்குவதனை 'பக்கப் பாய்ச்சல்' என்பர். இவ்வாறான தாக்கத்தின் போது கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு, மனித உயிரிழப்புகளும் உடல் அங்கவீனமும் ஏற்படக் கூடும்.

**படிமுறைப் பாய்ச்சல்:** ஒரு தூண் அல்லது மரம் போன்ற ஏதேனுமொன்றை தாக்கும் மின்னலானது, நிலத்தை அடைந்து குறிப்பிட்ட தூரம் வரை பரவிச் சென்று, அங்கிருக்கும் எவரேனும் ஒருவரில் பாதிப்புகளை ஏற்படுத்துவது படிமுறைப் பாய்ச்சல் எனப்படும்.

**தொடுகை தாக்கம்:** தொலைபேசி, கேபள் தொலைக்காட்சி, என்டனா, மின்கம்பி என்பவற்றின் தரவு கடத்திகளில் மின்னல் தாக்கம் ஏற்பட்டால், இவற்றில் ஏதேனுமொன்றுடன் மனிதனோ அல்லது கட்டடங்களோ அல்லது மரங்களோ தொடுகையிலிருந்தால், அந்த மின்னல் தாக்கத்துக்கு உள்ளாக நேரிடும். இதனை 'தொடுகை தாக்கம்' என்பர்.

## மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற...

★ மின்னல் தாக்கம் உள்ள போது வயல், மைதானம் போன்ற திறந்தவெளிகளில் இருந்து உடனடியாக வெளியேறுங்கள்.

★ எரிபொருள் நிரப்பாதீர்கள்.

★ திறந்த வாகனங்களை (மோட்டார் சைக்கிள், டிரக்டர், சைக்கிள்) பயன்படுத்தாதீர்கள்.

★ உலோக தூண்களுக்கு அருகில் நிற்காதீர்கள்.

★ குழுவாகதிறந்தவெளிப் பகுதியில் இருக்கும்போது, மின்னல் தாக்கம் ஏற்பட்டால் ஒருவருக்கொருவர் சில மீற்றர் தூரம் தள்ளியிருங்கள். கால்களை சேர்த்து வைத்து காதுகளை கைகளால் மூடிக்கொண்டு கீழ் நோக்கி தாழ்ந்து மின்னல் தாக்கம் மறையும் வரை இருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மரபுரிமை தளமாக பெயரிடப்பட்டுள்ள இலங்கையின் மத்திய மலைநாடு



உலகின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் தொகுதிகள் மூன்றினை உள்ளடக்கியிருக்கும் இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியானது, உலக மரபுரிமை தளங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இலங்கையில் உயிர்ப்பல்வகைமைத்துவம் நிரம்பிய பகுதிகளாக இனங் காணப்பட்டுள்ள நக்கிள்ஸ் வனாந்தரப் பகுதி, ஹோர்ட்டன் சமவெளி, சிவனொளி பாத மலை வனாந்தரப் பகுதி ஆகியவையே, மத்திய மலைநாட்டுப் பகுதிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த மூன்று சுற்றாடல் தொகுதிகளும் ஆகும். இந்த வனாந்தரப் பகுதிகள் ஆராய்ச்சிகள், கற்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கான சிறந்த இடங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

## ஹோர்ட்டன் சமவெளி

1833 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆளுநராக செயலாற்றிய சேர். ரொபட் ஹோர்ட்டனுக்கு மதிப்பளிக்கும் முகமாக, 'ஹோர்ட்டன் சமவெளி' என்று பெயரிடப் பட்ட இந்த சமவெளிப்பகுதி, பண்டைய காலத்தில் மஹா எலிய, மெனிக்தென்ன போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி, இயற்கை வனாந்தரப்பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஹோர்ட்டன் சமவெளி, அதன் சுற்றாடல், பூகோளவியல் மற்றும் உயிர்ப் பல்வகைமைத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு, 1988 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி தேசிய வனமாக பிரகடனம் செய்யப்பட்டது.

## நக்கிள்ஸ் வனாந்தரப் பகுதி

நக்கிள்ஸ் மலைத்தொடர்சார் வனாந்தரப் பகுதியானது, தொடர்ச்சியாக பனியினால்



ஹோர்ட்டன் சமவெளி

மூடப்பட்டுள்ளமையினால், 'புகை நிறைந்த மலைத்தொடர்' என்று அர்த்தப்படும் வகையில், 'தும்பற கந்துவெட்டிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்த வனாந்தரப் பகுதியானது,கண்டி - மாத்தளை மாவட்டங்களுக்கு உட்பட்ட சுமார் 21,000 ஹெக்டெயர் நிலப்பகுதி வரை பரந்துள்ளது. 1500 மீற்றருக்கும் மேற்பட்ட உயரம் கொண்ட நக்கிள்ஸ் மலைத்தொடரானது, 1873 ஆம் ஆண்டில் காலநிலை ஒதுக்குப் பிரதேசமாகவும், 2000ஆம் ஆண்டில் வன பாதுகாப்பு பிரதேசமாகவும், அதன் பின்னர் மனிதன் மற்றும் உயிர்ப் பல்வகைமைத்துவ ஒதுக்குப் பிரதேசமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

## சிவனொளிபாத மலை வனாந்தரப் பகுதி

இலங்கையின் உயரமான மலைகளில் ஒன்றாகக் கருதப்படும் சிவனொளிபாத மலைப்பகுதியைச் சூழவுள்ள 56 ஆயிரம் ஏக்கர் வரை பரவியுள்ள வனாந்தரப் பகுதியானது, சுற்றாடல் ரீதியில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1940 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில், இந்த பகுதியானது, சரணாலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.



நக்கிள்ஸ் வனாந்தரப் பகுதி



சிவனொளிபாத மலை வனாந்தரப் பகுதி



# கொம்பு ஓணான்

விஞ்ஞானப் பெயர்: *Ceratophora tennentii*

ஆங்கிலப் பெயர்: horned lizard, horn-nosed lizard, leaf-nosed lizard

*சிங்களப் பெயர்: அங் கட்டுஸ்ஸா, பெத்தி அங் கட்டுஸ்ஸா

இலங்கையில் Ceratophora பேரினத்திற்குரிய ஐந்து கொம்பு ஓணான் இனங்கள் உள்ளன. அவற்றுள் *Ceratophora tennentii* இனத்திற்குரிய கொம்பு ஓணான்களை, இலங்கையின் நக்கிள்ஸ் மலைத்தொடர்ப் பகுதியில் அதிகமாகக் காணலாம். இவை முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும். புழுக்கள், பூச்சிகள் போன்றவற்றை உட்கொள்ளும். இந்த ஓணானின் மூக்கின் நுனிப் பகுதியில் காணப்படும் இலை போன்ற அமைப்புக் காரணமாக, இவற்றை இலகுவில் அடையாளங்காணக்கூடியதாக இருக்கும். பகல்பொழுதில் இவ்வகை ஓணான்கள் மரக்கிளைகளில் செங்குத்தாக தொங்கியவாறு காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் சகோதரர்கள் இடையேயான உரையாடலைப் பார்ப்போம்.**

මල්ලි: දැන් නිවාඩු කාලේ. අපි මොකද කරන්නේ අයියේ?
தென் நிவாடு காலே. அப்பி மொகத கறன்னே அய்யே?
தம்பி: **இப்போது விடுமுறைக் காலம். நாம் என்ன செய்வோம் அண்ணா?**

නංගි: අපි ඔන්චිල්ලාවක් බඳිමු.
அப்பி ஒன்ச்சில்லாவக் பந்திமு.
தங்கை: **நாங்கள் ஓர் ஊஞ்சல் கட்டுவோம்.**

අයියා: ඔන්චිලි පදින්න අපි පොඩි ළමයි ද?
ஒன்ச்சிலி பதின்ன அப்பி பொடி ளமய் த?
அண்ணா: **ஊஞ்சல் ஆட நாம் சின்னப் பிள்ளைகளா?**

මල්ලි: අනේ අයියේ! අපට ඔන්චිල්ලාවක් බැඳල දෙන්නකෝ.
அனே அய்யே! அபட்ட ஒன்ச்சில்லாவக் பெந்தல தென்னகோ.
தம்பி: **ஐயோ அண்ணா! எங்களுக்கு ஓர் ஊஞ்சல் கட்டித் தாருங்கள்.**

අයියා: ඔන්චිල්ලාවක් කොහේද බඳින්නේ?
ஒன்ச்சில்லாவக் கொஹேத பந்தின்னே?
அண்ணா: **ஊஞ்சலை எங்கே கட்டுவது?**

නංගි: ගේ ඉස්සරහ තියෙන අඹ ගහේ බඳිමු.
கே இஸ்ஸரஹ தியென அம்ப கஹே பந்திமு.
தங்கை: **வீட்டுக்கு முன்னால் இருக்கின்ற மாமரத்தில் கட்டுவோம்.**

මල්ලි: අම්මා බනී ද දන්නේ නැහැ.
அம்மா பனீ த தன்னே நெஹெ.
தம்பி: **அம்மா ஏசுவாரோ தெரியாது.**

අයියා: අම්මා බනින්නේ නැහැ. ඔයා ලණුවක් අරගෙන එන්න.
அம்மா பனின்னே நெஹெ. ஒயா லணுவக் அரகென என்ன.
அண்ணா: **அம்மா ஏச மாட்டார். நீ போய் கயிறினை எடுத்து வா.**

මල්ලි: මෙන්න අයියේ ලණුව.
மென்ன அய்யே லணுவ.
தம்பி: **இதோ, அண்ணா கயிறு.**

**கயிறுடன் அண்ணா மரத்தில் ஏறுகின்றார்....**

නංගි: අයියේ, බලාගෙන ගහට නගින්න.
அய்யே, பலாகென கஹட்ட நகின்ன.
தங்கை: **அண்ணா, கவனமாக மரத்தில் ஏறுங்கள்.**

අයියා: ඔන්න දැන් ඔන්චිල්ලාව හරි.
ஒன்ன தென் ஒன்ச்சில்லாவ ஹரி.
அண்ணா: **இதோ, இப்போது ஊஞ்சல் அமைத்தாயிற்று.**

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. இப்போது விடுமுறைக் காலம்.
   ..........................................
2. ஊஞ்சல் கட்டித் தாருங்கள்.
   ..........................................
3. கயிறினை எடுத்து வா.
   ..........................................




**Will** சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால வினா நிலை வாக்கியங்கள் மற்றும் **'going to'** சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால வினா நிலை வாக்கியங்கள் ஆகியவற்றுடன் **What, Where, When, How** முதலான வினாச்சொற்களைக் கையாளும்போது, அந்த வாக்கியங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) What will you tell your teacher?
நீ உனது ஆசிரியருக்கு என்ன சொல்வாய்?

ஆ) What are you going to tell your teacher?
நீ உனது ஆசிரியருக்கு என்ன சொல்லப் போகின்றாய்?

★ What will you tell?
நீ என்ன சொல்வாய்?

★ What are you going to tell?
நீ என்ன சொல்லப் போகின்றாய்?

---

இ) Where will you buy the fish?
நீ எங்கே மீன் வாங்குவாய்?

ஈ) Where are you going to buy the fish?
நீ எங்கே மீன் வாங்கப் போகின்றாய்?

★ Where will you buy it?
நீ அதை எங்கே வாங்குவாய்?

★ Where are you going to buy it?
நீ அதை எங்கே வாங்கப் போகின்றாய்?

---

உ) When will you start your work?
நீ உனது வேலையை எப்போது ஆரம்பிப்பாய்?

ஊ) When are you going to start your work?
நீ உனது வேலையை எப்போது ஆரம்பிக்கப் போகின்றாய்?

★ When will you start?
நீ எப்போது ஆரம்பிப்பாய்?

★ When are you going to start?
நீ எப்போது ஆரம்பிக்கப் போகின்றாய்?

---

எ) How will they help us?
அவர்கள் எமக்கு எவ்வாறு உதவுவார்கள்?

ஏ) How are they going to help us?
அவர்கள் எமக்கு எவ்வாறு உதவப் போகின்றார்கள்?

★ How will they help?
அவர்கள் எவ்வாறு உதவுவார்கள்?

★ How are they going to help?
அவர்கள் எவ்வாறு உதவப் போகின்றார்கள்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை - இங்கிலாந்து போட்டிகளுக்கு புள்ளிகள் வழங்கும் யோசனை

இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையே மே மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கு போனஸ் புள்ளிகளை வழங்கும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான யோசனையொன்றை இங்கிலாந்து கிரிக்கெட் சபை முன்வைத்துள்ளது.

அதாவது, இரண்டு நாடுகள் மாத்திரமே மோதும் போட்டிகளுக்கு மேலும் முக்கியத்துவத்தையும் வலுவையும் சேர்க்கும் முகமாகவே, இந்த முறையினை அமுல்படுத்த விரும்புவதாக இங்கிலாந்து சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி டெஸ்ட் தொடரில் வெற்றிபெறும் ஒவ்வொரு டெஸ்ட் போட்டிக்கும் தலா 6 புள்ளிகளும், ஒருநாள் போட்டி வெற்றிக்கு 3 புள்ளிகளும், T20 வெற்றியொன்றிற்கு 2 புள்ளிகளும் வழங்கப்படும். மேலும் போட்டித் தொடரை வெற்றியீட்டினால் அதற்கு 3 மேலதிக புள்ளிகளும் வழங்கப்படும். ஆனால், போட்டித் தொடர் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றால் இரண்டு அணிக்கும் தலா 1 புள்ளி வீதம் அளிக்கப்படும்.

மேற்படி யோசனைகள் இலங்கை கிரிக்கெட் சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் மட்டத்தில் இது குறித்தான அபிப்பிராயங்களை கேட்டறிந்த பின்னர் நிறைவேற்றுக்குழுவில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வடிவில் SLPL போட்டிகள்

ஸ்ரீலங்கா பிரமியர் லீக் (SLPL) T20 போட்டிகளை வெளிநாட்டு வீரர்களின் பங்குபற்றுதலுடன் புதுப்பிக்கப்பட்ட வடிவில் மீண்டும் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை கவனத்தை செலுத்தியுள்ளது. இதற்கமைய, முன்னைய காலங்களில் இப்போட்டிகளை நடத்திய பாணியை முற்று முழுதாக மாற்றியமைத்து, சகல நாடுகளிலிருந்தும் முதன்மைநிலை வீரர்களை இடம்பெறச் செய்து, அதனூடாக, இலங்கை வீரர்களுக்கு போதிய அனுபவங்களைப் பெறச் செய்வதற்கான வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மீண்டும் அடுத்த T20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னோடியாக, அதற்கான வீரர்களை இனங்காண்பதற்கான சிறந்த முதலீட்டை ஒத்ததாக மேற்படி SLPL போட்டிகள் இலங்கைக்கு சாதகமாக அமையும் என்று கருதப்படுகின்றது.

# பாகிஸ்தான் தெரிவுக்குழு தலைவராக இன்சமாம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழு தலைவராக அவ்வணியின் முன்னாள் தலைவரான இன்சமாம் உல் ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். 46 வயதாகின்ற இன்சமாம் உல் ஹக் இந்நியமனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்; “பாகிஸ்தான் அணிக்காக பல போட்டிகளில் போட்டியிட்டிருப்பதாகவும், ஆனால், தெரிவுக்குழுவில் பணியை ஏற்பது இதுவே முதல் முறை எனவும், உடனடியாக வெற்றிகளை ஈட்டுவதற்கான மாயாஜால வித்தைகளோ, மந்திரக் கோலோ தம்மிடம் இல்லை எனவும் திறமையான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியொன்றை உருவாக்க பல விடயங்களில் சீர்படுத்தல்களை செய்யவேண்டியிருப்பதாகவும், அதுவரை ரசிகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



# நடால் மீண்டும் வெற்றி பெற்றார்

ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர டென்னிஸ் வீரர் ரஃபாயல் நடால் இம்முறை மொன்டி காலோஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் கிரீடத்தை சூடிக்கொண்டுள்ளார். கடந்த வாரம் பிரான்ஸில் முடிவுற்ற மேற்படி போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நடாலுடன் பிரான்ஸின் கயேல் மொன்ஃபில்ஸ் போட்டியிட்டார். மேற்படி இறுதிப் போட்டி சுற்றுக்களில் 3-1 என்ற கணக்கில் நடால் வெற்றிபெற்றார். அதன்படி 7-5, 5-7, 6-0 என்ற அடிப்படையில் இம்மூன்று சுற்றுக்களின் முடிவுகள் அமைந்திருந்தன. அரையிறுதியில் பிரிட்டனின் அன்டிமரேயை தோற்கடித்ததன் மூலமே நடால் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவரை 9 தடவைகள் இந்த வெற்றிப் பட்டத்தை நடால் சூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸி 500 கோல்கள்...

ஆர்ஜன்டீனா கால்பந்தாட்ட அணியின் தலைவரும், ஸ்பெயினின் பார்சிலோனா கழகத்தின் சார்பாகவும் விளையாடி வருபவருமான லயனல் மெஸ்ஸி மொத்தம் 500 கோல்களைப் போட்டு புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். கடந்த வாரம் ஸ்பெய்னில் நடைபெற்ற கழக மட்டத்திலான போட்டிகளில் பார்சிலோனா வலேன்சியா ஆகிய அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியின் போது, லயனல் மெஸ்ஸி அடித்த கோலின் மூலமே அவர் 500 ஆவது கோலை எட்டினார்.




இதன்மூலம் சர்வதேச மற்றும் கழக மட்டத்திலான போட்டிகளில் ஒட்டுமொத்தமாக 500 கோல்களைப் பெற்றவர் என்ற பெருமையை மெஸ்ஸி பெற்றுள்ளார். இதற்கமைய, பார்சிலோனா கழகத்திற்காக 450 கோல்களையும் ஆர்ஜன்டீனா அணிக்காக 50கோல்களையும் பெற்றுள்ளார் மெஸ்ஸி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள ஒவ்வொரு நாடு களினது பெருந்தெருக்கள் வழியாகச் சென்று சேகரித்த படங்களின் தரவுகளை 360 பாகையில் தனி பெனோரெமிக் புகைப்பட மாக்கி கூகுல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதே கூகுல் ஸ்ட்ரீட் வியூ ஆகும். இதனை கணினி, டெப் உபகரணம் அல்லது ஸ்மாட் ஃபோன் (தொலைபேசி) ஆகியவற்றில் கூகுல் மெப்ஸ் வழியாக எந்தவொரு இடத்திலும் முப்பரிமாண காட்சிகளை காண முடியும். இந்த தொழில்நுட்பத்துடன், அண்மையில் இலங்கையும் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்படி கூகுல் ஸ்ட்ரீட் வியூ வசதிகளைக் கொண்ட நாடுகளின் தொகை 76 ஆகும். இதற்காக பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய தகவல்கள் இதோ...


# ஒவ்வொரு நாடுகளினதும் வீதிகளை முழு உலகிற்கும் காட்டும் கூகுல் ஸ்ட்ரீட் வியூ



அநுராதபுரம்

கொள்ளுப்பிட்டி

## பெனோரெமிக் கெமரா
## Panoramic Camera




## காட்சிகளை பெற்றுக்கொள்ளும்போது

* கூகுல் நிறுவனத்தின் ஸ்ட்ரீட் வியூ மோட்டார் வாகனம் பயன்படுத்தப்படல்.
* தொடர்பாளர்கள் மூலம் பெறப்பட்ட காட்சிகளும் ஸ்ட்ரீட் வியூ இல் இணைக்கப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் அவர்களின் பெயரும் புகைப்படமும் குறிப்பிட்ட காட்சிகளோடு வெளியிடப்படும்.
* பிரதான பாதைகளில் இருக்கும் நபர்களின் முகங்களும் அங்குள்ள வாகனங்களின் இலக்கத் தகடுகளும் தன்னிச்சையாக அழிக்கப்படும்.

## ஸ்ட்ரீட் வியூ கார்
## Street View Car



நாடுகளிலுள்ள பிரதான வீதி களின் தரவுகள் இந்தக் காரின் மூலமே சேகரிக்கப்படுகின்றது. பெனோ ரெமிக் படங்களை எடுப்பதற்காக குறிப்பிட்ட கெமரா இக்காரின் மேல் பகுதியில் பொருத் தப்பட்டுள் ளது.

## ஸ்ட்ரீட் வியூ ட்ரோலி
## Street View Trolley



உலகின் புகழ்வாய்ந்த கட்டடங்களின் உட்புறக் காட்சிகளை கூகுல் ஸ்ட்ரீட் வியூ எடுப்பதற்காக இந்த ட்ரொலி பயன்படுத்தப்படுகின்றது.

## ஸ்ட்ரீட் வியூ ட்ரெக்கர்
## Street View Trakker



நபர் ஒருவரது பின்புறமாக தொங்கவிடக்கூடிய விதத்தில் பை ஒன்றில் பொருத்தப்பட் டுள்ள கெமராவால் சிறிய வீதி களின் வழியே சென்று தகவல் கள் சேகரிக்கப்படுகின்றது.

## ஸ்ட்ரீட் வியூ ட்ரைக்
## Street View Trike



மோட்டார் வாகனங்கள் செல்ல முடியாத பகுதிகளுக்கு சென்று தரவுகளை சேகரிக்க இதனை பயன்படுத்துகின் றனர்.

## ஸ்ட்ரீட் வியூ ஸ்னோமொபைல்
## Street View Snowmobile



கடுங்குளிர் நிலவும் நாடுகளில் கூகுல் ஸ்ட்ரீட் வியூ காட்சிகளை எடுப்பதற்கென்றே விசேடமாக இது தயாரிக்கப்பட்டுள் ளது. இதன் கெமராவும் கருவிகளும் கடுங்குளிருக்கும் தாக்குப் பிடிக்கக்கூடியன.



## கூகுல் ஸ்ட்ரீட் வியூ செயற்படும் விதம்

**படங்களை பெற்றுக் கொள்ளல்**

படங்களை எடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் குறித்து அவதானத்தை செலுத்துதல் இதற்கு இடம், காலநிலை, சனச்செறிவு என்பன தாக்கத்தை ஏற்படுத்தும்.

**புகைப்பட பகுப்பாய்வு**

புவியில் உள்ள இடங்களின் அமைவிடம் குறித்து இனங்காண்பதற்காக, மோட்டார் வாகனத்தில் உள்ள ஜி.பி.எஸ். நுண்கருவி, வாகனத்தின் வேகம் மற்றும் திசை என்பனவற்றை பயன்படுத்துகின்றனர்.

**பெனோரெமிக் புகைப்படமாக்குதல்**

அனைத்து புகைப்படங்களை ஒன்றின்மேல் ஒன்றாக அமையும் விதத்தில் 360 பாகை படங்களாக தொகுப்பதற்காக விசேட கணித முறையின்படி தயாரிக்கப்படுகின்றது.

இந்த பெனோரெமிக் காட்சிகளை எடுப்பதற்காக இலங்கை முழுவதும் உள்ளடங்கும் விதத்தில் **50,000** கி.மீற்றரிலும் அதிகமான தூரம் கூகுல் ஸ்ட்ரீட் வியூ வாகனங்கள் பயணித்துள்ளன.


இலங்கையில் 2014 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூகுல் ஸ்ட்ரீட் வியூ மூலம் தரவுகளைச் சேகரிக்கும் பணி 2016 பெப்ரவரியில் முடிவுற்றது.

உலகின் ஏனைய நாடுகளில் போலவே, இலங்கையிலும் உயர் பாதுகாப்பு இடங்களை இக்கெமரா சென்று தரவுகளை சேகரிக்காத வகையில் கூகுல் நிறுவனம் செயற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களுடன் இணைக்க




இடைவெளிகளை நிரப்புக

4 5 6 ___ 8

12 ___ 14 15 16


___ 15 16 17 ___

20 21 ___ 23 24


26 27 ___ ___ 30





குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சரியான சொல்லை எழுதுக





A, B பகுதிகளிலுள்ள படங்களை, பிரதான படத்தில் இனங்கண்டு ✓ அடையாளமிடுக




அறிவுக்கு விருந்து (13.04.2016) விடைகள்










குறுக்கெழுத்துப் போட்டி: 185



### மேலிருந்து கீழ்

01. பாரதியாரின் மனைவியின் பெயர்.
02. பைத்தியம். (குழம்பியுள்ளது)
03. நிலம்.
04. ஊவா மாகாணத்தின் தலைநகரம். (குழம்பியுள்ளது)
05. மோர் கடையத் தேவை. (தலைகீழ்)
06. 'நாய் .................. நிமிர்த்த முடியாது' என்பர்.

### இடமிருந்து வலம்

01. மேலிருந்து கீழாக சாய்வு இல்லாத நிலை.
02. செம்பும் துத்தநாகமும் கலந்த உலோகம். (குழம்பியுள்ளது)
04. சக்தி. (மாறியுள்ளது)
05. மான் போன்ற காட்டு விலங்கு. (மாறியுள்ளது)
06. மரக்கிளை. (மாறியுள்ளது)
07. ஆயுதமொன்று. (மாறியுள்ளது)
08. பறக்கும் இயல்புடைய முலையூட்டி. (மாறியுள்ளது)

குறுக்கெழுத்துப் போட்டி: 184 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பை | ங் | 2 ஜி | ளி | | 3 ச |
| ர | | ளி | 4 க | | தை |
| வி | | த் | 5 பு | தி | ரி |
| | 6 வே | த | ம் | | |
| 7 கு | டி | ட் | | 8 கூ | டு |
| | ட் | டு | 9 க | | 10 ஓ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வத்தளையைச் சேர்ந்த செந்தில்நாதன்-புவனகலா தம்பதியரின் செல்வப் புதல்வன் தஷான், தனது இரண்டாவது பிறந்ததினத்தை 21.04.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: யதுஷா)

விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

அபவக்க, ஹாலிஎலயைச் சேர்ந்த அப்துல் றசாக் - றஹிலாபீபீ தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ரஸ்மினா, தனது பிறந்ததினத்தை 23.04.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ரஸ்மி)



கிரிந்த புஹுல்வெல்லையைச் சேர்ந்த மொஹமட் நிப்ரான்-பாத்திமா அப்ரா தம்பதியரின் செல்வப் புதல்வி ஆய்னா மரியம், தனது முதலாவது பிறந்ததினத்தை 11.04. 2016 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# மனித நடத்தைகள்



மனிதனின் நடத்தைகள் சூழலுக்கு ஏற்ப மாறுபடலாம். அந்தவகையில், கோபம், அச்சம், மகிழ்ச்சி, பெருமிதம், ஆணவம், பொறாமை போன்ற குண இயல்புகள் மனித நடத்தையில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. அனேகமாக, மனிதர்களிடையே நற்குணங்களும், தீய குணங்களும் காணப்படுகின்றன. நற்குண இயல்புகள் அதிக அளவில் உள்ளவர் நல்ல மனிதர் என்றும் தீய குண இயல்புகள் அதிகமுள்ளவர் தீயவர் என்றும் சமூக மட்டத்தில் கணிக்கப்படுகின்றது. எனினும், நல்லவர்களிடம் தீய குணங்களும், தீயவர்களிடம் ஒரு சில நல்ல குணங்களும் இருப்பதை காணலாம். மனித நடத்தைகள் பெரும்பாலும் ஏனையவர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் அமைவதே சிறப்பானது.

அந்தவகையில், ஏனையவர்களின் திறமைகளை மதித்தல், தனி மனித விருப்பு வெறுப்புக்களை மதித்தல், மனம் புண்படாத வகையில் பேசுதல், ஒவ்வொரு தனி நபரையும் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் அணுகுதல், நலிந்தவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவுதல் போன்றன நல்ல நடத்தைகளின் ஒரு சில அம்சங்கள் எனலாம். எனினும், மனித நடத்தையில் மாறுபட்ட குண இயல்புகளும் உள்ளன. மூர்க்கத்தனமாக நடத்தல், புறம் கூறுதல் இவ்வாறான வேறுபல தீய குணங்களும் மனித நடத்தையில் காணப்படுகின்றன. இவை தனி மனித கௌரவத்திற்கு இழுக்காகும்.

இத்தகைய தீய குணங்களின் மூலம் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதும் கடினமாகும். மேலும் ஒருவருடனான நல்லுறவும் பாதிக்கப்படும். இவ்வாறான முரண்பட்ட மனித நடத்தைகளை நீக்குவதன்மூலமே, தனி மனித கௌரவங்களையும் பாதுகாக்க முடியும். இதன்மூலம் சிறந்த சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும்.


அத்துடன், தனி மனித நடத்தைகள் மற்றும் சமுதாய நடத்தைகள் ஆரோக்கியமானதாக அமைய கல்வியும் மிக முக்கியமான மூலதனம் ஆகும்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு




எம்.ராசித்,
கா/மல்ஹாருஸ் ஸல்ஹியா
தே.பாட., காலி.



எம்.ஹஸீன்,
நிக/அல்-இல்மியா மு.ம.வித்.,
வெல்பொத்துவெவ.



எஸ்.ரக்ஷிகா,
டியன்சின் த.ம.வித்.,
டியன்சின்.



எச்.ஹம்னா,
கமு/அல்-ப.ம.வித்., கல்முனை.



எ.மிஷேல் டீனா,
இ/களுநாயகம் த.ம.கல்.,
பலாங்கொடை.



கே.யுவாந்திகா காயத்திரி,
கலைமகள் ம.வித்.,
மாவத்துறை.



எம்.மிஸ்பா ஸைனப்,
அந்நூர் பாலர் பாட.,
மிதியால.



ஜினித்குமார்,
ம/மா/சாந்தமரியாள் வித்.,
அவிசாவளை.




மு.அபிலாஸ் சம்ஸீ,
தி/கி.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா
இ.கல்., திருகோணமலை.




வி.உதயகாந்தன்,
க/இக்ரா மு.ம.வித்., உலப்பனை.



என்.நிஸாரா,
கண்டி அராபா மு.ம.வித்.,
கண்டி.



க.தனுஸ்டன்,
ஹைகிறீன் த.வித்., நுவரெலியா.



எஃப்.சுஹானா,
பதுரியா ம.கல்., மாவனல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



★ சங்க காலத்தில் சோழ மன்னர்களின் தலை நகரம் எது?

உறையூர்



★ இலங்கை சுதந்திரம் பெற்றபோது, பிரித்தானியாவின் பிரதமராக இருந்தவர் யார்?

கிளேமேன்ட் அட்லி



★ சோவியத் யூனியனால் எப்போது ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்கப் பட்டது?

1979 இல்



★ உலகிலுள்ள இயற்கை துறைமுகங்களில் இரண்டாமிடத்தைப் பெறும் துறைமுகம் எது?

திருகோணமலை



★ இலங்கையின் இராணுவ வரலாற்றில் பீல்ட்மார்ஷல் பட்டத்தைப் பெற்றவர் யார்?

சரத் பொன்சேகா



★ எரிபொருளால் இயங்கும் காரை முதலில் கண்டுபிடித்தவர் யார்? எப்போது? எந்த நாட்டில்?

ஜேர்மனியைச் சேர்ந்த கார்ல் பென்ஸ் 1885 இல் கண்டுபிடித்தார்


★ இலங்கைப் நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாயகர் யார்?

ஆல்ஃபிரட் பிரான்சிஸ் மொலமுரே

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## உலகில் பிரபல்யமானவர்கள்

# சோமசுந்தர பாரதியார்



சத்தியானந்தன் சோமசுந்தரன் என்னும் இயற்பெயரைக் கொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த தமிழறிஞர் ஆவார்.

இவர் சுப்பிரமணிய நாயகர்- முத்தம்மாள் தம்பதியினருக்கு மகனாக 1879 ஜூலை மாதம் 27 ஆம் திகதி எட்டயபுரத்தில் பிறந்தார்.

சோமசுந்தர பாரதியார் தனது தொடக்கக் கல்வியை எட்டயபுரத்திலும் இடைநிலைக் கல்வியை நெல்லையில் உள்ள சி. எம்.எஸ்.கல்லூரிப் பள்ளியிலும் கற்றார்.நெல்லையில் கற்கையை முடித்த சோமசுந்தர பாரதி சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்று கலைத்துறை (Bachelor of Arts) பட்டத்தையும் சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று 1905 ஆம் ஆண்டில் சட்டத்துறை பட்டத்தையும் (Bachelor of Law) பெற்றார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றிய பொழுது தானே சுயமாகப் பயின்று 1913 இல் கலை முதுநிலை (Master of Arts) பட்டத்தையும் பெற்றார்.

இவர் பல தமிழ் பாடல்களையும் நூல்களையும் எழுதினார். அதுமட்டுமன்றி மதுரை மாவட்டத்தின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் தலைவராக செயற்பட்டவர்களில் இவரும் ஒருவராவார். எட்டயபுரத்து அரண்மனையில் நடந்த கூட்டமொன்றில் அரங்கேற்றப்பட்ட சோமசுந்தரனின் ஈற்றடி பாடல்களின் பொருள் கண்டு இலங்கையில் இருந்து சென்றிருந்த புலவர் ஒருவரால் பாரதியார் பட்டம் சோமசுந்தரருக்கும் அவரின் நண்பருக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சோமசுந்தர பாரதியார் இளமையிலேயே சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபாடு கொண்டவராக திகழ்ந்தார். பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தோடும் தொடர்புடையவராக இருந்தார். இதனால், சடங்குகள் நீக்கிய திருமணம் உள்ளிட்ட விழாக்களை முன்னின்று நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் மதுரை மாவட்ட தலைவராகவும் செயற்பட்டார். அப்பணியின் உச்சமாக, 1933 மே 13 ஆம் திகதி மதுரைக்கு அருகில் உள்ள உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு எனத் தொடக்கப் பள்ளி ஒன்றை நிறுவினார். இவ்வாறு காலத்தால் அழியாத பல பணிகளை தமிழ் மொழிக்காகவும் மக்களுக்காகவும் செய்த சோமசுந்தர பாரதியார் 1959 ஆம் ஆண்டு 14 ஆம் திகதி இறை எய்தினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கில கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*13.04.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*

**செயற்றிட்ட லூன் (Project loom)**

**Pendrive வெற்றியாளர்:**

எம்.என்.முன்சிப்,
5/3/1A, ரம்புக்கன வீதி,
பூட்டெவ, மாவனெல்லை.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message

**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(27.04.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**

27.04.2016

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தெ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றப்பர் பட்டியும் வெப்பமும்



விஞ்ஞான விந்தைகள்



**தேவையான பொருட்கள்:**

★ சற்று தடித்த, றப்பர் பட்டி மட்டும்.

இன்று நாம் வெப்பம் மற்றும் றப்பர் சம்பந்தப்பட்ட ஒரு விஞ்ஞான விந்தையினை நிகழ்த்தப் போகின்றோம். றப்பர் பட்டியினுள் மற்றும் அதன் வெளிப்பகுதியில் வெப்பம் எவ்வாறு பயணிக்கின்றது என்று பார்ப்பதற்கான இந்த பரிசோதனைக்கு வெப்பத்தினை அளக்கும் கருவி அவசியமாகும். எம்மிடம் இருக்கும் சிறந்த வெப்பத்தினை அளக்கும் கருவியாக எமது சருமம் காணப்படுகின்றது. நெற்றி மற்றும் உதட்டு சருமமே இதற்கு பயன்படும்.

## இவ்வாறு செய்வோம்

★ றப்பர் பட்டியினை எடுத்து அதன் இரு முனையிலும் பெருவிரல்களால் பிடித்து உங்களுடைய நெற்றியில் அல்லது உதட்டின் மீது வைத்துப் பாருங்கள். பட்டி சூடாக உள்ளதா? குளிர்மையாக உள்ளதா? என்று பரீட்சித்துப் பாருங்கள். இதனை நீங்கள் பல முறை செய்ய வேண்டும்.

★ றப்பர் பட்டியினை உங்கள் முகத்தசைகளில் படாதவாறு வெளியே இயலுமான வரை தூரம் இழுங்கள். அத்துடன், முகத்தில் வைத்து அதன் வெப்பத்தினை உணருங்கள். முதலில் கிடைத்த பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

★ இழுபட்டிருக்கும் றப்பர் பட்டியினை முகத்திற்கு அப்பால் எடுத்து நெகிழ்வுபடுத்துங்கள். பின்பு அதன் தட்ப வெப்பத்தினை உணருங்கள்.

பெறுபேற்றினை உறுதிப்படுத்தி சில இறப்பர் பட்டிகளை எடுத்து பரிசோதித்துப் பாருங்கள்.

## என்ன நடைபெறுகின்றது?

றப்பர் பட்டியினை இழுத்துப் பார்க்கும் போது, அது குளிர்மையாக இருக்குமாயின், அது உங்களது சருமத்திலிருந்து வெப்பத்தினை உறிஞ்சியுள்ளது. அது வெப்பமாக இருக்குமாயின் அதிலிருந்து உங்களது சருமத்திற்கு வெப்பம் கடத்தப்பட்டுள்ளது. அதில் உணரப்படாத வெப்பம் அல்லது குளிர் தன்மை காணப்படாவிடின் அதில் வெப்பம் கடத்தப்படவில்லை என்பதே முடிவாகும்.





# பல்கேரியா

*மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள பல்கேரியா 1908 இல் சோவியத் சமவுடமை குடியரசின் ஆதிக்கத்திட் குட்பட்டு அதனை தொடர்ந்து 1946 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது.*



பல்கேரிய மக்கள் வாழ்கின்றனர்.



ஸ்லெவிக் மக்கள் இந்நாட்டின் ஆதிக் குடிகளாவர்.



பல்கேரியா பால்டிக்குடா நாடுகளில் ஒன்று.

**தேசிய மிருகம், பறவை, மலர்**

தேசிய மிருகம் - சிங்கம்

தேசிய பறவை - குறிப்பிடப்படவில்லை

தேசிய மலர் - ரோஜா மலர்

**இனங்கள்**




**மொழிகள்** பல்கேரியர் 76.8%, துருக்கி 8.2% உரோம் 3.8%, ஏனைய மொழிகள் 0.7%, மொழி குறிப்பிடாதோர் 10.5%

**சமயம்** கிழக்கு ஓர்த்தடோக்ஸ் 59.4%, இஸ்லாம் 7.8%, சமயமற்றோர் 3.7%, சமயம் குறிப்பிடாதோர் 27.4%, ஏனையோர் 1.7%

**அரசியல்**



நாடாளுமன்றக் கட்டடம்



பிரதமர் - பொய்கோ பொரிசோவ்

**இயற்கை வளம்** பொக்சைட், செம்பு, துத்த நாகம், தங்கம், நிலக்கரி




ஐந்து நூற்றாண்டுகளாக ஒட்டோமன் பேரரசால் ஆளப்பட்டது.



நாணயம் - பல்கேரிய லெவி



பாரம்பரிய உடை.



இங்கு மலைத் தொடர்கள், பீடபூமிகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள் என்பன உள்ளன.

**தலைநகரமும் பெரிய நகரமும்**



பாரம்பரிய நடனம்.





மீன் பிடித் தொழில்



விவசாயம் முக்கிய வாழ்வாதாரம் ஆகும்.



புகையிலை பயிர்ச் செய்கை



உணவுத் தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பால்பண்ணைப் பொருட்களுக்கு புகழ்பெற்ற நாடு.



அணுசக்தியும் இங்குண்டு.

பழவகைகள், காய்கறிகள், தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன.



இயந்திர உற்பத்திக்கு புகழ் பெற்றது.



செம்புச் சுரங்கம்.



புடவை, ஆடைக் கைத் தொழிற்சாலை.



இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர்.



ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவ தேவாலயம்.

Digitized by Noolaham Foundation.



# சர்வதேச அறிவுசார் சொத்துரிமை தினம் (World Intellectual Property Day)



ஒரு படைப்பாளியின் சுய கற்பனையில் உருவான எந்தவொரு விடயத்தினதும் உரிமை அவனை மட்டுமே சார்ந்ததாகும். அவ்வுரிமை உள்ளோரின் அனுமதியின்றி ஏனையோர் அதனை பயன்படுத்த முடியாது. இவற்றையே அறிவுசார் சொத்துரிமை என்பர். இவற்றுள் கட்டுரை, ஓவியம், கதை, இசை, படங்கள், கண்டுபிடிப்புகள், நுட்பங்கள், வணிகச் சின்னங்கள், இரகசியங்கள், பதிப்புரிமை,படைப்புரிமம், புவிசார் குறியீடு போன்றவை அடங்கும்.

## அறிவுசார் சொத்துரிமை அமைப்பு (World Intellectual Property Organization)


1970 ஆம் ஆண்டு இத்துறைசார்



சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெற்று அதன் மூலம் சர்வதேச அறிவுசார் சொத்துரிமை அமைப்பு உருவாக்கப்பட்டது. இதனை WIPO என சுருக்கமாக அழைப்பர். அதன்பின் 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 26 ஆம் திகதியை அறிவுசார் சொத்துரிமை தினமாக அனுஷ்டிக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

உலகில் அறிவுசார் சொத்துரிமையின் பங்களிப்பு பற்றியும் அவை மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் விழிப்புணர்வு குறித்தும் உலகளாவிய ரீதியில் கண்டுபிடிப்பாளர்கள் கலைஞர்கள்

WIPO
WORLD
INTELLECTUAL PROPERTY
ORGANIZATION




ஆகியோரால் சமூகத்துக்கு வழங்கும் பங்களிப்புகளை கௌரவிக்கும் நோக்குடனேயே சர்வதேச அறிவுசார் சொத்துரிமை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

## நான்கு வகையான சொத்துரிமைகள்

அறிவுசார் சொத்துரிமைகள் நான்கு வகைப்படும். அவையாவன;

1. பதிப்புரிமை
2. வணிகச்சின்னங்கள்
3. காப்புரிமை
4. வர்த்தக இரகசிய நுட்பங்கள்

உலகில் பொருளாதார, சமூக மாற்றங்கள் மற்றும் வளர்ச்சிக்கு அறிவுசார் சொத்துரிமை பெரும் பங்காற்றுகின்றது. அத்தோடு, வணிக மேம்பாடுகளுக்கும் ஊன்றுகோலாகத் திகழ்கின்றது. இன்று உலகெங்கும் இடம்பெறும் புத்தாக்கங்களின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் சொத்துரிமை அடித்தளமாக அமைகின்றது. அதேவேளை, தனிநபரினதோ அல்லது ஒரு நிறுவனத்தினதோ சுய உரிமத்தினை ஏனையோர் அபகரிக்காதபடி பாதுகாக்கவும், வருமான இழப்பு ஏற்படாது தடுக்கவும் சொத்து மதிப்பிழப்பை தடுப்பதற்கும் அச்சொத்துரிமையினை பாதுகாத்தல் அவசியமாகும்.



## தொனிப்பொருட்கள்

2001 முதல் இன்றுவரை அறிவுசார் சொத்துரிமை தின தொனிப்பொருட்களாவன:

2001 - எதிர்காலத்தை இன்று அமைத்தல்
2002 - ஆக்கத்திறனை ஊக்கப்படுத்தல்
2003 - அறிவுசார் சொத்துரிமையை உங்கள் வணிகமாக்குங்கள்
2004 - ஆக்கத்திறனை ஊக்கப்படுத்துங்கள்
2005 - சிந்தி - கற்பனை செய் - உருவாக்கு
2006 - கருத்துடனான ஆரம்பம்
2007 - ஆக்கத்திறனை ஊக்கப்படுத்தல்
2008 - கண்டுபிடிப்புகளை கொண்டாடுவதோடு, அறிவுசார் சொத்துரிமையை மதியுங்கள்
2009 - பாதுகாப்பான எதிர்காலத்திற்கான பசுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்
2010 - உலகத்தை இணைத்தல்
2011 - எதிர்காலத்தை வடிவமைத்தல்
2012 - தொலைநோக்கு கண்டுபிடிப்பாளர்கள்
2013 - படைப்பாற்றல் எதிர்கால சந்ததியினர்
2014 - திரைப்படங்கள் உலகளாவிய ரீதியிலான ஆர்வம்
2015 - இசைக்காக எழுந்து நில்
2016 - டிஜிட்டல் படைப்பும் கலாசார மீள் கற்பனை செய்தல்

## அறிவுசார் சொத்துரிமையினை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

★ பதிப்புரிமை, காப்புரிமை, வணிகச் சின்னங்கள்,இரகசிய நுட்பங்கள் பற்றிய நுணுக்கமான அறிவினை பெற்றுத் தெளிதல்.

★ அறிவுசார் சொத்துரிமைகளின் செலவினை குறைப்பதற்கு அடிப்படைத் தேவையான விடயங்களைத் தேடிப் பெறல்.

★ இதில் நிபுணத்துவம் மிக்கவர்களிடம் இருந்து அவை தொடர்பான சட்ட விடயங்களை கேட்டு அவற்றை செயற்படுத்தல்.

மேற்குறித்த விடயங்கள் குறித்து மக்கள் மத்தியில் விளக்கத்தை வழங்க WIPO கடமைப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

- இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்








# வியக்க வைக்கும் கட்டடம்






ஸ்வீடன் நாட்டின் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளமான 'ஸ்டொக்ஹோம் நகர மண்டபம்' பற்றி அறிந்திருக்கிறீர்களா? ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நொபெல் விருது வழங்கும் விழா இங்குதான் நடைபெறுகின்றது. ஸ்டொக்ஹோம் நகர சபைக்கு சொந்தமான இந்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் 1911 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1923 ஆம் ஆண்டு நிறைவடைந்துள்ளது. இந்த கட்டடத்தைக் கட்டுவதற்கு சுமார் 80 லட்சம் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த செங்கற்களில் பெரும்பாலானவை கையினால் உருவாக்கப்பட்டவையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் கோபுரம் 106 மீற்றர் உயரம் கொண்டது. இந்த கட்டட வளாகத்தில் ஸ்டொக்ஹோம் நகர சபை உட்பட, அலுவலகங்கள், மாநாட்டு மண்டபங்கள், விழா மண்டபங்கள் என்பனவும் அமைந்துள்ளன.

# களைகள் அழிக்கும் ரொபோ

விவசாய நிலங்களில் முளைக்கும் களைகளை அழிப்பதற்காகவே ரொபோ ஒன்று உருவாக்கப்பட் டுள்ளது. 'போனிரொப்' (BoniRob) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ரொபோவுக்கு, விவசாய நிலங்களிலுள்ள களைகளை அடையாளங் காட்டிவிட்டால் போதும். நிலத்தில் எங்கெங்கெல்லாம் களைகள் முளைத்திருக்கின்றன என்பதை ஜி.பி.எஸ். மூலம் இனங்கண்டு, ஊர்ந்து சென்று அந்தக் களைகளை நசுக்கி, நிலத்தில் அப்படியே புதைத்து விடும். பின்னர் அதே இடத்தில் மீண்டும் சில தடவைகள் வலம் வந்து, எஞ்சியிருக்கின்ற களைகளையும் நசுக்கி, அப்படியே நிலத்தில் புதைத்து விடுமாம் இந்த போனிரொப். இந்த ரொபோவை **'Bosch'** என்ற ஜேர்மனிய நிறுவனத்தின் டீப்ஃபீல்ட் ரொபோடிக்ஸ் பிரிவு உருவாக்கியிருக்கிறது.





# முதலாவது மடிக்கணினி



ஒஸ்போர்ன் 1

உலகின் முதலாவது மடிக்கணினி 1979 ஆம் ஆண்டு பில் மொக்ரிட்ஜ் என்பவரால்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அவர் 'GRiD Compass' என்று பெயரிட்டிருந்தார். எனினும், 1981 இல் எடம் ஒஸ்போர்ன் என்பவரால் வடிவமைக்கப்பட்ட 'ஒஸ்போர்ன் 1' என்ற பெயருடைய மடிக்கணினியே, விற்பனைக்காக சந்தைக்கு வந்த முதலாவது மடிக்கணினியாகும். சுமார் பத்து கிலோ கிராம் எடையும், மிகச் சிறிய திரையும் கொண்ட ஒஸ்போர்ன் மடிக்கணினிகளைக் கண்டு அன்றைய காலத்தில் எல்லோரும் ஆச்சரியப்பட்டுள்ளதுடன், அவற்றை வாங்கவும் முண்டியடித்துள்ளனர். அப்போது 'ஒஸ்போர்ன் 1' மடிக்கணினியின் விலை 1,795 அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.




GRiD Compass

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினரால் 2016, ஏப்ரல் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 27, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org